# முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அருப்புக்கோட்டை.
# அசல் வழக்கு எண். 5/2011

வா.சா.1- குறுக்கு விசாரணை - நாள் 12-10-2023.
பெயர் = கருப்பசாமி வா.சா.-1
வா.சா.1 நீதிமன்றத்தில் மீண்டும் ஆஜராகி 2ம் பிரதிவாதி தரப்பில் கு.வி.-

(1) ராமலிங்க சன்யாசி மடத்திற்கு டிரஸ்டியாக என்னை எவ்வாறு தேர்ந்தெடுத்தார்கள் என்றால் நிலம் கொடுத்தவர்கள் செட்டியார் என்றும், அவர் இறந்தபிறகு நான் நிர்வாகத்தில் வந்துள்ளேன் என்கிறார் சாட்சி. தும்மசின்னம்பட்டி செடடியார் சமூதாயத்தில் என்னை டிரஸ்டியாக நியமிக்க ராமலிங்க சன்யாசி இனாம் செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிக்கொடுத்துள்ளாரா என்றால் இல்லை. எனது தரப்பில் 23-01-1950ம் தேதியிட்ட வா.சா.ஆ.-5 இனாம் செட்டில்மெண்ட் ஆவணத்தை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். அந்த இனாம் செட்டில்மெண்ட் பத்திரத்தில் டிரஸ்டியாக வரக்கூடியவர் எந்தெந்த வகையில் தேர்ந்தெடுக்கப்படவேண்டுமென்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த அடிப்படையில் டிரஸ்டியை தேர்ந்தெடுக்கப்படுவது மேலமுடிமன்னார் கோட்டை-1, கீழமுடி மன்னார் கோட்டை-2, தும்முசின்னம்பட்டி-3, செட்டிகுளம்-4, ராமசாமி பட்டி-5 ஆகிய 5 கிராம மக்களும் ஒன்று சேர்ந்து அவர்களில் ஒருவரை டிரஸ்டியாக தேர்ந்தெடுக்க வேண்டுமென்று வா.சா.ஆ.-5 ஆவணத்தில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால், அதே ஆவணத்தில் மேற்படி 5 கிராம மக்களும் ஒன்று சேர்ந்து டிரஸ்டியாக ஒருவரை தேர்ந்தெடுக்காத பட்சத்தில் மடத்திற்கு தொண்டு செய்யும் ஒருவரை டிரஸ்டியாக நியமிக்கலாம் என்று சொல்லப்பட்டுள்ளது என்று சாட்சி தன்னிச்சையாக சாட்சியம் அளிக்கிறார். மேற்படி 5 கிராம மக்களும் சேர்ந்து என்னை டிரஸ்டியாக தேர்ந்தெடுத்ததாக நான் சொல்லவில்லை என்றும், எனது சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள்தான் என்னை டிரஸ்டியாக தேர்ந்தெடுத்ததாக சொல்லியுள்ளேன் என்றும், அவ்வாறு எனது சமூதாயத்தைச் சேர்ந்தவர்கள் என்னை டிரஸ்டியாக தேர்ந்தெடுக்க அதிகாரம் இல்லையென்றும் சொன்னால் சரியல்ல. நான் தொண்டு செய்து வந்ததாலும், தாவா நிலமானது, மடத்திற்கு செட்டியார் சமுதாயத்தை சார்ந்தவர் கொடுத்தது என்பதாலும் என்னை டிரஸ்டியாக நியமித்ததாக சாட்சி தன்னிச்சையாக சாட்சியம் அளிக்கிறார். வா.சா.ஆ.-5ல் சொல்லப்பட்டுள்ள ஷரத்துக்களை மறைத்து இந்த வழக்கை நான் தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

(2) நான் ராமலிங்க சன்யாசி மடத்திற்கு டிரஸ்டி கிடையாது

என்றும், பொய்யாக வழக்குதாக்கல் செய்துள்ளேன் என்றும் சொன்னால் சரியல்ல, 2ம் பிரதிவாதி தாக்கல் செய்த எதிர்வழக்குரையை படித்துப் பார்த்தேனா என்றால் படித்துப்பார்த்தேன் என்கிறார் சாட்சி. அதில் 6வது பாராவில் 2 ம் பிரதிவாதியின் தகப்பனாருக்கு 26-11-1978ம்தேதியில் ராமலிங்க சன்னியாசி தபசில் சொத்தை பதிவு செய்த உயில்மூலம் பாத்தியப்படுத்தி கொடுத்திருக்கிறார் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி பதிவு செய்யப்பட்ட உயிலை 31-08-1979-ல் ரத்து செய்துள்ளதாக 2ம் பிரதிவாதி தாக்கல செய்துள்ள எதிர்வழக்குரையில் சொல்லியுள்ள விவரம் எனக்குத் தெரியுமா என்றால் தெரியாது. அதுபோல் 2ம் பிரதிவாதிக்கு கடந்த 09-03-1982ம் தேதியில் தபசில் சொத்தைப் பொறுத்து ராமலிங்க சன்யாசி ஒரு பதிவு செய்யப்படாத உயில் ஆவணம் எழுதிக் கொடுத்துள்ளார் என்ற விவரம் எனக்குத் தெரியுமா என்றால் தெரியாது. 2ம் பிரதிவாதி மேற்படி உயில் ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டும் என நான் கோரவில்லை என்று சொன்னால் சரிதான். ராமலிங்க சன்யாசி மடத்திற்கு நான் சட்டப்படியான டிரஸ்டி கிடையாது என்றும், வா.சா.ஆ.-5 இனாம் செட்டில்மெண்ட் ஷரத்துக்களுக்கு விரோதமாக டிரஸ்டி என்று பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை- இல்லை.